


எல்.டி.டி.ஈ என்றால் நமக்கு ராஜீவ்காந்தி கொலை ஞாபகத்துக்கு வரும். அல் காயிதா என்றால் வர்த்தக மையக் கட்டடத் தகர்ப்பு. ஜெய்ஷ் ஏ முஹம்மது என்றால் நாடாளுமன்றத் தாக்குதல். இந்த மாதிரி ஹிஸ்புல்லா என்றதும் உலக மக்களுக்கு உடனடியாக மனத்தில் தோன்றக்கூடிய ஒரு சம்பவம் உண்டென்றால், அது TWA விமானக் கடத்தல்தான்.

இஸ்ரேல் அமெரிக்காவுக்கு எதிரான யுத்தத்தில் ஹிஸ்புல்லா இதுவரை செய்யாத காரியமில்லை. ஆள் கடத்தல், குண்டு வீச்சு, கண்ணிவெடி, ராக்கெட் தாக்குதல், பீரங்கித் தாக்குதல், துப்பாக்கிச் சூடு, ஆயுதக் கடத்தல் என்று ஒன்று மிச்சமில்லை. சகலவிதமான சாத்தியக்கூறுகளையும் டெஸ்ட் பண்ணிப் பார்த்துவிட்டார்கள். புதிது புதிதாகக் கண்டுபிடித்துக்கொண்டும் இருக்கிறார்கள். ஆனால், நினைத்தாலே குலைநடுங்கவைக்கும் காரியமாகச் செய்தவை கொஞ்சம்தான். அவற்றுள் இந்த விமானக் கடத்தல் ரொம்ப முக்கியம்.

TWA என்பது, Trans World Airlines என்பதன் சுருக்கம். இது ஓர் அமெரிக்க விமான கம்பெனி. 2001-ம் வருஷம் இதை, அமெரிக்கன் ஏர்லைன்ஸ் சாப்பிட்டு ஜீரணிக்கும்வரை உலகின் புகழ்பெற்ற விமான நிறுவனங்களுள் ஒன்று என்பதாகக் கருதப்பட்டது. எக்கச்சக்க விமானங்களுடன் உலகம் முழுக்கப் பறந்து பறந்து சம்பாதித்துக்கொண்டிருந்த கம்பெனி. இதைத்தான் குறிவைத்தது ஹிஸ்புல்லா.

ஜூன் 14, 1985. டி.டபிள்யூ.ஏ நிறுவனத்தின் விமானம் ஒன்று (போயிங் 727) கிரீஸ் நாட்டின் தலைநகரமான ஏதென்ஸிலிருந்து ரோம் நகருக்கு அன்றுகாலை 10.10 மணிக்குப் புறப்பட்டது. பறக்கத் தொடங்கிய ஏழாவது நிமிஷம், விமானம் கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

விமானத்தைக் கடத்தியவர்கள், மொத்தம் இரண்டே பேர். ஒரு சிறு அரை பிளேடு கூட எடுத்துக்கொள்ளாமல், சமர்த்தாக ஏதென்ஸ் விமான நிலையத்தில் டிக்கெட் வாங்கிக்கொண்டு ஏறி உட்கார்ந்தார்கள். (ஆனால் முன்னதாக ஏற்பாடு செய்திருந்தபடி, ஏதென்ஸ் விமான நிலைய செக்யூரிடி ஆபீஸர்கள் சிலர் மூலம் அவர்களுக்குத் தேவையான பிஸ்டல்களும் கிரேனைடு குச்சிகளும் அவர்கள் சீட்டுக்குக் கீழே வந்து சமர்த்தாக உட்கார்ந்திருந்தன.) விமானம் பறக்கத் தொடங்கி, சீரான உயரத்தைத் தொட்டதும் திட்டமிட்டபடி எழுந்து சென்று, காக்பிட்டை உடைத்து, விமானியின் நெற்றிப் பொட்டில் பிஸ்டல் வைத்துவிட்டார்கள்.

ஜான் டெஸ்ட்ரேக் (John Testrake) என்கிற அனுபவம்மிக்க பைலட்டும் பிலிப் ஜி. மெரெஸ்கா (Philip G. Maresca) என்கிற துணை பைலட்டும் சாமியை வேண்டிக்கொண்டுதான் விமானத்தைக் கிளப்பியிருப்பார்கள். ஏனோ, அன்றைக்கு அந்த இரண்டு ஆசாமிகளிடமிருந்து சாமியால் அவர்களைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

ஒரே பேராகிரா∴ப்தான் பேசினார்கள். 'விமானம் கடத்தப்பட்டிருக்கிறது. முரண்டு பிடிக்காமல்

ஒழுங்கு மரியாதையாக விமானத்தை பெய்ரூத்துக்குத் திருப்பு. இல்லாவிட்டால், அத்தனை பேரும் அப்படியே விமானத்தோடு பரலோகம் போகவேண்டியதுதான்.'

எனவே, ரோமுக்குப் போகவேண்டிய விமானம் லெபனானுக்குத் திருப்பப்பட்டது.

லெபனான் தலைநகரான பெய்ரூத்தில் இருந்த விமான நிலையம், ஒரு பொட்டல்காடு. டிக்கெட் கவுன்ட்டர் இருக்கிற வாசல் மட்டும்தான் ஒரு விமான நிலையம் மாதிரி இருக்கும். ஓடுபாதைக்கு அந்தப் பக்கம் பாதுகாப்புச் சுவர் ஏதும் கிடையாது. கிராமத்துப் பெரிசுகள் அப்படியே காலாற நடந்துவந்து இயற்கை அன்னை அழைத்தால், செவி அல்லது வேறேதாவது சாய்த்துவிட்டுப் போவார்கள். பையன்கள் திடீர் திடீரென்று கத்திக்கொண்டு ஓடி விளையாடுவார்கள். அவ்வளவாக அந்தப் பக்கம் பாதுகாப்புக் கிடையாது.

அப்பேர்ப்பட்ட இடத்துக்கு வந்து இறங்கிய அந்தக் கடத்தல் விமானம், ஒரு பெரிய நாடகத்துக்கான முதல் காட்சிக்குத் தயாராகிக்கொண்டிருந்தது. இத்தனைக்கும் விமானம் கடத்தப்பட்ட உடனேயே விமானத்திலிருந்து கண்ட்ரோல் ரூமுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுவிட்டது. 'இந்த மாதிரி, யாரோ கடத்தியிருக்கிறார்கள்; பெய்ரூத்தில் இறங்குகிறோம், பிழைத்தால் கடவுள் புண்ணியம்' என்று ஏதென்ஸ், ரோம், பெய்ரூத் விமான நிலைய அத்தாரிடிகளுக்கு விமானியே தகவல் தந்துவிட்டார்.

அப்படியும், இறங்கி நின்ற விமானத்தை நெருங்குவதற்கு பெய்ரூத் அதிகாரிகளுக்குத் துணிச்சல் போதவில்லை. பத்து நிமிஷம், அரை மணி, ஒரு மணி, மூன்று மணி... ம்ஹூம். ஒரு ஜந்துவும் அருகே வந்து பார்க்கவில்லை. உள்ளே பயணிகள் சௌக்கியமாகத்தான் இருக்கிறார்களா, யாராவது பிராணனை விட்டிருக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள ஆவல் மட்டும் இருந்தது. ஆனால் நெருங்க பயம்.

ஏனெனில், கடத்தப்பட்ட விமானம் பெய்ரூத்தில் இறங்கியிருக்கிறது என்றதுமே, கடத்தியது யாராக இருக்கும் என்று ஒருமாதிரி யூகித்திருந்தார்கள். வேறு யாராக இருந்தாலும் சாலாக்காகப் பேசி, ஏதாவது சரிபண்ணிவிட முடியும். ஹிஸ்புல்லாவிடம் பேச்சு என்பதே சாத்தியமில்லை. என்ன காரியத்துக்காகக் கடத்தினார்களோ, அது நிறைவேறும்வரை பேச்சுவார்த்தை பஜனைகளுக்கு இடமே கிடையாது என்பது ஹிஸ்புல்லாவின் கொள்கை. (இஸ்ரேலை ஒழிப்பதுதான் லட்சியம் என்று சொல்லிவிட்டு ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் என்பதால், இன்றுவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் இஸ்ரேலுடன் எந்தப் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டதில்லை என்பதை நினைவு கூரவும்!)

இவ்வாறு விமான நிலைய அதிகாரிகளும் காவல் துறையினரும் கையாலாகாமல் நகம் கடித்துக்கொண்டிருக்க, இறங்கிய விமானத்துக்கு உள்ளே இருந்த கடத்தல்காரர்கள், தாங்கள் எரிபொருள் நிரப்புவதற்காக மட்டுமே இறங்கியதாகவும், விமானத்துக்குத் தேவையான எரிபொருளை நிரப்பி உதவும்படியும் மரியாதையாகக் கேட்டுக்கொண்டது யாருமே எதிர்பாராத ஆச்சர்யம்.

அப்படியானால்? கடத்தியது ஹிஸ்புல்லா இல்லையா? வேறு யாராவதா?

சரி, ஆனது ஆகட்டும் என்று விமான நிலைய அதிகாரிகள், "கடத்தல் விமானத்துக்கு ஓசியில் எரிபொருள் நிரப்புவதெல்லாம் சாத்தியமில்லை; வேண்டுமானால், உரிய பணத்தைக் கொடுத்து பெட்ரோல் வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள்.

கடத்தல்காரர்களிடம் பணம் இல்லை. ஆனால், விமானம் தொடர்ந்து பறந்தாக வேண்டும். என்ன செய்யலாம்?

பயணிகளை இறக்கிவிடுங்கள்; விமானத்துக்கு எரிபொருள் தருகிறோம் என்று அதிகாரிகள்

கேட்டுப்பார்த்தார்கள். கடத்தியவர்கள் கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, வேறு வழியில்லை என்பது தெரிந்தவுடன் 19 பயணிகளை மட்டும் இறக்கிவிட சம்மதித்தார்கள்.

இதற்கிடையே, கடத்தியவர்கள் யார், என்ன கோரிக்கை, எந்த ஊர்க்காரர்கள் என்று விதவிதமாக கண்ட்ரோல் ரூமிலிருந்து கேள்விமேல் கேள்வி கேட்டுக்கொண்டே இருந்தார்கள். ஆனால், பதில் ஏதும் வரவில்லை. 'வேண்டியது பெட்ரோல். பதிலுக்குப் பத்தொன்பது பேர் பிழைத்துப் போக விடுகிறோம். மற்றபடி சம்பந்தம் பேசவெல்லாம் சம்மதமில்லை' என்று சொல்லிவிட்டார்கள்.

வேறுவழியில்லாமல் எரிபொருள் நிரப்பிக்கொடுத்துவிட்டு, அவர்கள் இறக்கி அனுப்பிய பத்தொன்பது பேரை மட்டும் பத்திரமாக அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

விமானம் அன்று மதியமே பெய்ரூத்திலிருந்து புறப்பட்டுவிட்டது. எங்கே போகிறது? என்ன நோக்கம்?

யாருக்கும் தெரியாது. அமெரிக்கா கவலை கொண்டது. லெபனான் அரசாங்கத்தைக் கேள்வி கேட்டுத் துளைத்து எடுத்தது. இன்னொரு பக்கம் இஸ்ரேல், பிரிட்டன், கிரீஸ், இத்தாலி அரசுகளும் லெபனானைக் கேள்விகளால் வேள்வி செய்ய ஆரம்பித்தன.

'எங்களுக்கு எதுவும் தெரியாது. வந்தார்கள், இருந்தார்கள், சென்றார்கள்' என்கிற பல்லவியையே அவர்கள் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

இதற்கிடையில், சர்வதேச வான் எல்லை முழுவதையும் கண்காணிக்கும்படி அத்தனை தேசத்து ஏர்போர்ட் அத்தாரிடிக்கும் உத்தரவிடப்பட்டது. அமெரிக்க சாட்டிலைட்டுகளின் கவனம் முழுவதும் பறக்கும் விமானங்களின் மீதே இருக்கும்படி திசை மாற்றிவிடப்பட்டன. அனைத்து விமான நிலையங்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. தரையிறங்க அனுமதி கேட்கும் அனைத்து விமானங்களையும் துப்புரவாக விசாரித்துவிட்டு இறக்கும்படி வலியுறுத்தப்பட்டது. கடத்தப்பட்ட விமானம் எங்கு தரையிறங்கினாலும் அடுத்த வினாடி அமெரிக்காவுக்குத் தகவல் தரச் சொல்லிக் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு தேசத்திலும் உள்ள அமெரிக்க, கிரீஸ், இத்தாலி தூதரகங்களுக்கு உடனடியாகச் செய்தி அனுப்பப்பட்டது.

இந்த கலாட்டாக்கள் எல்லாம் நடந்துகொண்டிருந்த வேளையில், மேற்படி விமானம் சமர்த்தாக அல்ஜீரியாவுக்குப் போய் அங்கே அல்ஜியர்ஸ் நகர விமான நிலையத்தில் இறங்கியது. வடக்கு ஆப்பிரிக்க தேசமான அல்ஜீரியாவுக்கு, அந்த விமானம் ஏன் போனது என்பதற்கான சரியான காரணம் எதுவும் தெரியவில்லை. தவணை முறையில் பயணிகளை உலகம் சுற்றிக்காட்டி இறக்கிவிடும் உத்தேசம் போலிருக்கிறது.

சுமார் ஐந்து மணிநேரம் அல்ஜியர்ஸ் விமான நிலையத்தில் ஓய்வெடுத்ததற்குக் கூலியாக, அங்கே ஒரு இருபது பயணிகளை இறக்கிவிட்டுவிட்டு, அன்றிரவே விமானம் மீண்டும் பெய்ரூத்துக்கு வந்தது.

இதற்குள் செய்தி உலகம் முழுவதும் பரவிவிட, என்ன ஆகப்போகிறதோ, மிச்சமுள்ள 111 பயணிகளின் கதி என்னவாகுமோ, கடத்தியவர்கள் அவர்கள் அத்தனை பேருக்கும் '111' போட்டுவிடுவார்களோ என்று குலைநடுங்கிப் போய்ப் பேசத் தொடங்கியிருந்தார்கள்.

இரண்டாவது முறையாக விமானம் மீண்டும் பெய்ரூத்துக்கு வந்து சேர்ந்தபோது, திடீரென்று எங்கிருந்தோ முளைத்த பத்து ஆயுதம் தாங்கிய, முகம் மூடிய போராளிகள், ரைட் ராயலாக நடந்து வந்து விமானத்தில் ஏறிக்கொண்டார்கள். ஏற்கெனவே, விமான நிலையத்தின் ஓடு பாதைக்கு அந்தப் பக்கம் உள்ள வெட்டவெளி குறித்துப் பார்த்தோமல்லவா? அந்த வழியாகத்தான் இந்தப் பத்துப்பேரும் வந்தார்கள்.

புதிதாக வந்தவர்கள், பயணிகள் வரிசையை வேகமாக ஒரு நோட்டமிட்டார்கள். சட்டென்று ஒரு முகம் அவர்களுக்கு அங்கே பரிச்சயமானது போலத் தோன்றியது. 'ஆ, இது அமெரிக்கக் கடற்படை ஆபீஸர் ராபர்ட் ஸ்டெதம் (Robert Stethem) அல்லவா?'

அவ்வளவுதான். கோழி அமுக்குவதுபோல அவரைப் பாய்ந்து சென்று அமுக்கிப் பிடித்து அடி அடி என்று அடித்துத் துவைத்தார்கள். ஆத்திரம் அடங்காமல் கைத்துப்பாக்கியாலும் கண்டபடி சுட்டார்கள். அந்த அதிகாரி பரிதாபமாக உயிரை விட, அப்படியே விமான ஜன்னல் வழியாகவே அவரைத் தூக்கி வெளியே கடாசினார்கள்.

இந்தக் கொடூரத்தைப் பார்த்த விமானப் பயணிகள், அவரவர் தாய்மொழியில் தம்மை மறந்து அலறத் தொடங்க, அந்தக் கணத்தில் யார் யார் ஹீப்ருவில் அலறுகிறார்கள் என்று கவனித்து, 'டேய் அவன் யூதன், விடாதே' என்று அகப்பட்டவர்களையெல்லாம் போட்டு சாத்து சாத்தென்று சாத்தினார்கள்.

களேபரங்களைப் பார்த்தும் ஒன்றும் செய்யமுடியாமல் தவித்து நின்றது காவல்துறை. அப்படியே நில்லுங்கள் என்று டாட்டா காட்டிவிட்டு மீண்டும் விமானத்தை அல்ஜியர்ஸுக்கு ஓட்டிப்போய்விட்டார்கள். எதற்குப் போனார்கள் என்று இப்போதும் தெரியவில்லை. ஆனால், இன்னொரு 65 பயணிகளை இறக்கிவிட்டு, மறுநாள் (ஜூன் 16 அன்று) மீண்டும் பெய்ரூத்துக்குத் திருப்பினார்கள்.

இதற்கிடையில், விமானத்தைக் கடத்தியவர்கள் தங்கள் கோரிக்கை என்னவென்று தெரியப்படுத்தியிருந்தார்கள்.

லெபனானுக்குள் இஸ்ரேல் ராணுவம் கைதுசெய்து இழுத்துப் போயிருக்கும் அத்தனை ஷியா முஸ்லிம்களையும் ஒருவர் பாக்கியில்லாமல் விடுதலை செய்ய வேண்டும்.

தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்தும் கொலைவெறியாட்டத்துக்கு உலக நாடுகள் அனைத்தும் கண்டனம் தெரிவிக்கவேண்டும். இஸ்ரேல் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மத்தியக் கிழக்கு விவகாரங்களில் தேவையில்லாமல் மூக்கு நுழைப்பதை அமெரிக்கா நிறுத்தவேண்டும். இது விஷயத்தில் அமெரிக்காவை உலக நாடுகள் அனைத்தும் கண்டிக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகள் எல்லாம் 'பரிசீலிக்கப்பட்டு'க் கொண்டிருந்தபோது, கிரீஸ், தான் முன்னர் பிடித்து வைத்திருந்த ஹிஸ்புல்லா போராளி அலி அட்வா (AliActwa) என்பவனை விடுதலை செய்தது. பதிலுக்கு விமானத்தில் இருந்த எட்டு கிரீஸ் நாட்டுப் பயணிகளை ஹிஸ்புல்லா விடுவித்தது. (அவர்களுள் ஒருவர், கிரீஸின் புகழ்பெற்ற நாட்டுப்புறப் பாடகர் டெமிஸ் ரவுஸோஸ்.)

சனிக்கிழமை ஆரம்பித்த இந்த நாடகம், திங்கட்கிழமை மத்தியானம் வரை இண்டர்வலே இல்லாமல் தொடர்ந்தது. போலீஸ்காரர்கள், அரசாங்கமெல்லாம் பேசினால் வேலைக்கு ஆகாது என்று முடிவு செய்த லெபனான் அரசு, யாரும் எதிர்பார்க்க முடியாத ஒரு விநோதமான முடிவை எடுத்தது.